www.newwisdomministries.com

# ஞானஒலி






## மரணத்தை வென்ற மாவீரர்

ஞானம் 6 - ஒலி 14 - 02.04.2023

# மரணமில்லா பெருவாழ்வு யாரால்?





**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் - ஞான ஒலி

இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை ஞான ஒலி மின்னதழின் வாசகப் பெருமான்களே உங்கள் அனைவரையும் வணங்குகின்றேன்.

மரணமில்லாப் பெருவாழ்வை நீங்கள் பெறவேண்டுமென்று இறைவனை மன்றாடுகின்றேன்.

நமக்கு நம் தந்தையின் பெயர், தாத்தாவின் பெயர் தெரியும், ஆனால் நமது பாட்டனாரின் பெயர் ஓரளவு தெரிந்திருக்கும், ஆனால் பூட்டனின் பெயர் பலருக்குத் தெரியவே தெரியாது. நம் கிராமங்களில் நம் ஊர் பெரியவர்களில் யாராவது ஓரிருவர் முன்னோர்களின் பெயர்களை நினைவில் வைத்திருந்து கூறினால், நாம் குறித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது.

பூட்டனின் பெயர், கொள்ளுத் தாத்தா. அவருக்கு மேல் எள்ளுத் தாத்தாவின் பெயர்கள் யாருக்கும் சத்தியமாகத் தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை, ஆனால் 2000 வருடங்களுக்குப் முன் வாழ்ந்த வள்ளுவரின் பெயரை இன்று துவக்கப் பள்ளி குழந்தைக்கும் தெரிந்திருக்கிறது, அந்த அளவுக்கு மரணத்தைக் கடந்து இன்றும் வாழும் அவரைப் போல உங்கள் பெயரும், நினைவும் என்றும் அழியாது ஜடமரணத்தை வென்று மக்கள் மனங்களில் நினைவுகளாக என்றும் வாழும் பாக்கியத்தை இறைவன் உங்களுக்குத் தரவேண்டும் என்றே நான் முதலில் உங்களை வாழ்த்தினேன்.

இந்தப் புனித வாரத்தில் இறைமகனையே காவு வாங்கிய மரணத்தை உண்டாக்கிய பாவத்தின் கொடுமையையும், அதனை வெல்லும் சூத்திரத்தையும் இறைவன் தம் மகனின் கீழ்ப்படிதலின் வழியாகக் நமக்குக் கற்றுத் தந்ததைத் தியானிக்கப் போகின்றோம்.

இறைவனையே சாகடித்த மரணம் வலியது என்பதை நல்ல வெள்ளி நமக்கு எடுத்துக் கூறுகின்றது. மரணம் ஜெயித்துவிட்டதே என்ற துக்கத்தினால், விரக்தியினால் உலகம் விக்கித்துப் போக இறைவன் நம்மை கைவிட்டுவிடவில்லை.

மாறாக, இறைவனையே காவு வாங்கிய பாவத்தின் கனியாகிய அந்த மரணத்தின் கொடூரத்தையும், மதிமயக்கும், அழகான, கவர்ச்சியான, தொட்டால் கெடுக்கும் பாவத்தின் இரத்த வெறியையும், அதன் நரகத்தன்மையையும், நாம் அறிந்து அதன் கெட்ட சகவாசத்தை இன்றே விட்டுவிட வேண்டும் என்ற ஞானத்தையும், மீட்புக்கான விதையையும், இறைவனின் உதிரத்தையும், இறையாற்றலையும் நமக்குத் தருகின்ற நாள்தான் இந்த நல்ல வெள்ளி.

மானிடப் பாவங்கள் இறைவனையே நரபலி கேட்கும் என்ற தெய்வ பயத்தை நமக்குக் கற்றுத் தருகின்ற காலம் தான் இந்தப் புனித வாரம்.

பாவத்தைவிட, பரிசுத்தத் தந்தையின் இரக்கமும், வல்லமையும் மிகப் பெரியது என்பதை இந்தப் புனித வாரத்தின் இறுதிநாளிலே

எக்காளம் ஊதி வெற்றி முழக்கமிடும் திமிரையும் நமக்குத் தருக்கின்ற காலம் வரத்தான் போகின்றது. அதற்காகவும் நம்மை இந்தப் புனித வாரம் நம்மை பயிற்றுவிக்கின்றது.

நல்லொழுக்கம் தோற்பதில்லை. கெடுமதியின் கொட்டம் அடக்கப்படும் என்ற பேருண்மையை நமக்குக் மீண்டும் வலியுறுத்தப்போகின்றது வரவிருக்கும் உயிர்ப்புப் பெருவிழா.

ரெண்டுங் கெட்டானாயிருக்கும் நல்லவர்களை மரணம் விழிக்கவைக்கும், இறுதியில் ஞானிகளாக்கும். அதைதான் மாவீரன் மகா அலெக்ஸாண்டரின் இறுதிக் காலம் நமக்கு சுட்டிக் காட்டுகின்றது.

அலெக்ஸாண்டர் பிறந்த போது அவரது தந்தை இரண்டாம் பிலிப், மாபெரும் செல்வத்தை மக்களுக்கு வாரி வழங்கினார். அதைப் பார்த்து அமைச்சர்கள், தளபதிகள் ஏன் என்று கேட்டபோது, சாக்ரடீஸின் மாணவனான அரிஸ்டாட்டில் வாழும் காலத்தில் தன் மகன் பிறந்த மகிழ்ச்சியில் இவ்வாறு மக்களுக்கு வாரி வழங்கினேன் என்று அவர் சொன்னாராம். தன் மகனுக்கு ஒரு மாபெரும் தத்துவ ஞானியிடம் கல்வி கிடைக்கப்போவதை மாபெரும் பாக்கியமாகக் கருதினார். கல்வி இணையற்ற செல்வம் என்பதை அவர் அறிந்திருந்தார்.

அரிஸ்டாட்டில் கற்றுக் கொடுத்த ஞானத்தினால்தான், எந்த நாட்டைக் கைப்பற்றினாலும், அந்த நாட்டுப் பெண்களை, முக்கியமாக அந்த நாட்டு இளவரசிகளைக் கௌரமாக நடத்தினார். எந்தப் பெண்ணையும் தனது இச்சைக்காகப் பயன்படுத்தியதேயில்லை. அந்த அளவிற்கு பெண்களை மதித்தார்.

அலெக்ஸாண்டர் இந்தியாவை முற்றுகையிட்டபோது, அப்போது மகத நாட்டை ஆண்டு வந்தவர் சந்திரகுப்தா மௌரியா. அவர் சாணக்கியாவினால் அரசானாக்கப்பட்டவர். போரிட்டு அலெக்ஸாண்டரின் படையை வெல்ல முடியாது என்பதை உணர்ந்த சாணக்கியா, சந்திரகுப்தாவை அலெக்ஸாண்டரோடு நட்பு பாராட்டச் சொல்கின்றார். அதன்படி, அலெக்ஸாண்டரை ஒரு பெரும் விருந்துக்கு அழைக்கின்றார்கள். அவரும் சமாதானத்திற்குச் சம்மதித்து விருந்துக்கு வருகின்றார். அச்சமயத்தில் விஷ கன்னிகா என்ற அழகிய பெண்கள் அவருக்கு உணவு பரிமாறுகின்றார்கள். அவர்களின் உபசரிப்பில் மதிமயங்கி, அவர்களோடு சல்லாபத்தில் ஈடுபடுகின்றார். அதன் பிறகுதான் அலெக்ஸாண்டர் விஷக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறக்கும் தருவாய்க்குச் செல்கின்றார்.



அவருக்கு வந்த காய்ச்சல், சாதாரண காய்ச்சல் அல்ல. அது ஒரு திட்டமிட்ட சதி. அது அலெக்ஸாண்டரை கொல்வதற்காக சாணக்கியாவும், சந்திரகுப்த மௌரியாவும் தீட்டிய சதி. அந்த விருந்தில் உணவு பரிமாறிய விஷ கன்னிகர்கள், அந்த நாட்டில் பிரபலமான விபச்சாரத் தொழிலைச் செய்தவர்கள். அவர்களுக்கு விஷக் கன்னிகள் என்று பெயர். அவர்கள் பால்வினை நோய்களினால் பாதிக்கப்பட்ட விஷப் பெண்கள். அவர்களை அலெக்ஸாண்டரோடு உறவு கொள்ள வைத்தார்கள் அவர் அந்த பால்வினை நோயினால் பாதிக்கப்பட்டார். அதனால்தான் அவன் அந்த நோயினால் பாதிக்கப்பட்டு காய்ச்சலில் இறந்தான் என்று இன்றைய நவீன விஞ்ஞானம் கூறுகின்றது.

அலெக்ஸாண்டர் இறக்க வேண்டிய இறுதிக் காலத்தில், தன் அமைச்சர்கள், தளபதிகளை அழைத்து, மூன்று கட்டளைகளைப் பிறப்பித்தார்.

ஒன்று, தனது சப்பெட்டியை, அந்த நாட்டு மருத்துவர்களே தூக்கிச் செல்ல வேண்டும். ஏனென்றால், மரணத்தை வெல்ல உலகில் எந்த மருத்துவமும் இல்லை என்பதை உலகம் உணரவேண்டும்.

இரண்டாவதாக, தனது

சவப்பெட்டியின் இருபக்கத்திலும் ஓட்டைபோட்டு அவற்றின் வெளியே தன் இரு கைளையும் தொங்க விட்டுத் தூக்கிச் செல்ல வேண்டும், உலகின் பெரும் பகுதியை வென்ற அலெக்ஸான்டர், வெருங் கையினனாய்ச் செல்கிறான் என்று மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, தனது சவ ஊர்வலத்தின்போது, தனது செல்வக் களஞ்சியத்தில் உள்ள வைரம், முத்து, மாணிக்கக் கற்கள், தங்கக் கட்டிகளை வாரி இறைத்துக் கொண்டே செல்ல வேண்டும், அதன் மூலமாக, உலகச் செல்வங்கள் நிலையற்றவை, அதனால் ஒரு வினாடிகூட உயிரைத் தக்க வைக்க முடியாது, மேலும் மண், பெண், பொன்னாசை எல்லாமே வீண் என்று மக்கள் அறியட்டும் என்று சொன்னாராம்.

அலெக்ஸாண்டர் தன் ஆசிரியர் அரிஸ்டாட்டிலிடம் கற்ற கல்வியே இறுதியில் பேர், புகழ், செல்வம், அரசகங்காரம் அனைத்தும் வீண் என்று அவருக்கு உண்மையை உணர்த்தியது.

ஆனால் இயேசு பெருமான், தான் வாழ்ந்த காலத்திலேயே, இவையெல்லாவற்றையும் கற்றுத் தந்தார். அதைத்தான் மூன்றாம் நூற்றாண்டில் அரிஸ்டாட்டில் கற்றுக் கொடுத்ததை அலெக்ஸாண்டர் தன் மரண வேளையில் உணர்ந்து கொண்டு மரண சாசனமாக மக்களுக்கு விட்டுச் சென்றார். பெண்களின் சக வாசமே அறியாதிருந்த 29 வயது மாவீரன், இறுதியில் மனிதரின், மன்னிக்கவும் பாப்பானின் சதிச் செயலால் மதிமயங்கி, தன்னிலை இழந்ததோடு தன்னுயிரையும் இழந்தான். இந்த உலகம் தன்னைச் சார்ந்தவர்களை, மண்ணோடு மண்ணாக்காமல் விடாது.

அவன் சிந்திய லட்சக்கணக்கான மக்களி இரத்தம் அவனைக் காவு வாங்கியது. அவனின் பாவமே அவனை விழுங்கிவிட்டது. மீட்பில்லாமல் மரித்தான்.

ஆனால், பாவமே அறியாத இறைமகன், பாவிகளை மீட்க பாவமானார். பிறரை பிழைக்க வைக்க பலியானார்.

இறைவாக்கின்படி பலர் வாழ, அவர் தனியாளாய் தன்னைப் தகனப் பலியாக்கினார்.

பாராரியாய்ப் பிறந்தவர், தலைசாய்க்கக் கூட இடமல்லாது வாழ்ந்தவர், இறுதியிலும்கூட ஊருக்கு வெளியே தள்ளப்பட்டு கொல்லப்பட்டார், இரவல் கல்லறையில் அடக்கப்பட்டார் நம் ஆண்டவர் இயேசு என்ற வலிச் செய்தி, வலிமையான நற்செய்தியானது.

அதுவே இன்று உலகை ஆளுகின்றது. செல்வத்துக்கும், இறைவனுக்கும் ஊழியம் செய்ய முடியாது. இல்லாமையிலேதான இறைவனை உணர முடியும் என்று அவரது வாழ்க்கையே நமக்கான நற்செய்தி.

அரிஸ்டாட்டில் என்ற ஒரே ஒரு ஆசிரியர் கற்றுக் கொடுத்ததால், மரண வேளையிலாவது மகா அலெக்ஸாண்டர் இந்த உண்மையை அறிந்து கொண்டார். நமக்கெல்லாம் பாடமானார்.

இறைமகனின் இறைவார்த்தைகள், வள்ளுவனின் வாக்கியங்கள், இலக்கியங்கள், மாபெரும் தத்துவ ஞானிகளை அறிந்துள்ள நாம் இந்தப் பேருண்மைகளை அறிந்திருந்தும், உணராமல் வாழும் நமக்குத்தான் இந்தப் புனித வாரம் பாடம் எடுக்கின்றது.

உண்மையா அது என்ன? என்று முழித்த பிலாத்துவைப் போல நாமும் உண்மையை உணராமல் வாழுகின்ற இந்த நிலையை மாற்ற அழைப்பு விடுக்கின்றது இந்தப் புனித வாரம்.

இயேசு கூறினார், நானே வாழ்வும், வழியும், உண்மையும் என்று.....கேட்கச் செவியுள்ளோர், பார்க்கும் விழியுள்ளோர் நாம்....செவிசாய்ப்போமா? விழித்துக் கொள்வோமா?




# விவிலியம் அறிவோம் – 84
## வழிபாட்டுக் கொண்டாட்டங்கள்

# விவிலியம் அறிவோம்



அருட்பணி.
ஆ.அலெக்ஸ்.cmf



விவிலியம்
விடுவிக்கும்

தூய்மை விதிகளின் மையமாக பண்டைய இஸ்ரயேலில் கொண்டாடப்பட்ட வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் உள்ளன. இந்த வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் பற்றி லேவி 23வது பிரிவில் நாம் வாசிக்கிறோம். விவிலியத்தில் இந்தப் பிரிவில் மட்டுமே ஆண்டு வழிபாட்டுக் குறிப்புகள் தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தப் பிரிவின்படி வாழ்வில் தூய்மை என்பது அறநெறி வாழ்வை அல்லது ஒழுக்க வாழ்வைத் தேடி அடைவதில் அல்ல மாறாக அது ஒரு வழிபாட்டுத் தேடல். ஒவ்வொரு நாள், வாரம், மற்றும் ஆண்டுக் கொண்டாட்டங்களில் தூய்மை பெறப்பட வேண்டும். லேவி 23 வது பிரிவு ஒரு ஆண்டு வழிபாட்டுக் குறிப்பேட்டைப் பதிவுசெய்து அவற்றின் வழியாக தூய்மையை அடைய அழைப்பு விடுக்கிறது. ஒவ்வொரு வாரமும் வருகின்ற ஓய்வு நாள் கொண்டாடங்கள், வருடாந்திர விழாக்களான பாஸ்காப் பெருவிழா, புளிப்பற்ற அப்பவிழா, வாரங்கள் திருவிழா, எக்காளம் முழங்கும் விழா, பாவக்கழுவாய் விழா மற்றும் கூடாரப்பெருவிழா போன்றவற்றைக் கூறலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் இஸ்ரயேல் மக்களின் விழாக்களைக் குறிப்பிடுகின்றன.

### வழக்கமான கொண்டாட்டங்கள்

**அன்றாடபலிகள்:** ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன (விப 29:38-46; எண் 28:1-8)

**ஓய்வுநாள் கொண்டாட்டங்கள்:** வெள்ளிக்கிழமை மாலையிலிருந்து சனிக்கிழமை மாலைவரை. ஓய்வு மற்றும் வழிபாடு (தொநூ 1; விப 20; 31:12-17; லேவி 23:1-3; எண் 28:9-10)

### வசந்தகாலகொண்டாட்டங்கள்

**பாஸ்காபெருவிழா:** இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற நாள் நினைவு (விப 12-13; லேவி 23:4-5; எண் 28:16; இச 16:1-7). இந்த விழா நிசான் மாதம் 14 ஆம் நாள் கொண்டாடப்பட்டது (மார்ச் – ஏப்ரல்).

**புளிப்பற்ற அப்பவிழா:** பாஸ்காவிழாவைத் தொடர்ந்து ஏழு நாள்கள் கொண்டாடப்பட்டது. அதாவது நிசான் மாதம் 15 முதல் 21 வரை (மார்ச் - ஏப்ரல்) விப 12-13; லேவி 23:6-8; எண் 28:17-25; இச 16:8.

**முதல் பலன் விழா:** விளைந்த பார்லியின் முதல் கதிர் (லேவி 23:9-14; இச 16:9-12; காண்க இச 26). இந்த விழா நிசான் மாதம் 16 ஆம் நாள் அல்லது பாஸ்காப் பெருவிழா ஓய்வுநாளுக்குப் பிறகு வருகின்ற ஞாயிற்றுக்கிழமை.

**பெந்தக்கோஸ்து பெருவிழா:** தானியங்களின் முதல் பலன். பாஸ்காப் பெருவிழாவின் ஐம்பதாவது நாள் அல்லது முதல் பலன் விழாவிற்கு ஏழு வாரங்களுக்குப் பிறகு (விப 23:16; லேவி 23:15-22; எண் 28:26-31; இச 16:9-12).

**இலையுதிர்காலக் கொண்டாட்டங்கள்**

**எக்காளம் ஊதும் நாள்:** இது ஓர் அமாவாசை விழா (லேவி 23:23-25; எண் 29:1-6). திஸ்ரி மாதத்தில் (செப்படம்பர் அக்டோபர்) கொண்டாடப்பட்டது.

**பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள்:** பாவங்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் பாவக்கழுவாய் நிறைவேற்றப்படும் (லேவி 16; 23:26-32; எண் 29:7-11). திஸ்ரி மாதம் பத்தாம் நாள் கொண்டாடப்பட்டது.

**கூடாரத்திருவிழா:** திராட்சை மற்றும் ஒலிவம் அறுவடை செய்யும் நேரத்தில் கொண்டாடப்பட்டது (விப 23:17; லேவி 23:33-43; எண் 29:12-39; இச 16:13-15). திஸ்ரி மாதம் 15 முதல் 22 ஆம் தேதிவரைக் கொண்டாடப்பட்டது.

ஓய்வுநாள் விழா ஒவ்வொரு வாரமும் கொண்டாடப்பட்டது. இந்த விழா கடவுள் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் படைத்த பின் ஓய்வு எடுத்ததை நினைவுகூர்கிறது: கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசிவழங்கி, அதைப் புனிதப்படுத்தினார்... என நாம் தொநூ 2:2-3 இல் வாசிக்கிறோம். கடவுள் தூயவர். கடவுளின் தூய்மையைப் பிரதிபலிப்பதற்குக் கடவுள் செய்வதை நாமும் செய்ய வேண்டும். ஓய்வுநாள் படைப்பின் காலச் சுழற்சியைப் பிரதிபலிக்கிறது. ஓய்வுநாள் விடுதலை பெற்றவர்கள், அடிமைகள் மற்றும் விலங்குகளுக்கும் உரியது. ஒவ்வொரு வார இறுதியிலும் வருகின்ற ஓய்வுநாள் கொண்டாட்டத்தைத் தவிர்த்து மக்கள் ஆன்மீக வாழ்வில் வளர்வதற்கு ஆண்டு முழுவதும் பல கொண்டாட்டங்கள் இருந்ததை லேவி 23 வது பிரிவு குறிப்பிடுகிறது. இந்தக் கொண்டாட்டங்கள் முக்கியமாக முதல் மாதத்திற்கும் ஏழாவது மாதத்திற்கும்

இடையில் கொண்டாடப்பட்டன. ஆங்கில மாதத்தைக் கணக்கிட்டால் இந்தக் கொண்டாட்டங்கள் மார்ச் மாதத்திற்கும் அக்டோபர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில்; கொண்டாடப்பட்டன. இந்தக் கொண்டாட்டங்களுக்காக மக்கள் ஒன்றுகூடி வருவது புனித சபை அல்லது திருப்பேரவை என அழைக்கப்பட்டது (லேவி 23:4-5, 7, 8, 21, 24, 27, 35, 37). இந்த விழா கொண்டாடப்பட்ட நாள்கள் ஓய்வுநாள்கள்; ஆண்டவருக்காக ஒதுக்கப்பட்ட நாள்கள்; புனித நாள்கள். இந்தச் சிறப்புக் கொண்டாட்டங்களைக் கொண்டாடுவதன் வழியாக இஸ்ரயேல் மக்கள் கடவுளின் நம்பிக்கையையும் நன்மைத்தனத்தையும் நினைவு கூர்ந்தார்கள்.

இந்தக் கொண்டாட்டங்களில் முதல் கொண்டாட்டம் பாஸ்காப் பெருவிழா. அதைத் தொடர்ந்து புளிப்பற்ற அப்பத் திருவிழா வருகிறது. இந்த இரண்டு திருவிழாக்களும் தனித்தனியாகக் கொண்டாடப்பட்டவை. இந்த விழாக்கள் அறுவடைத் திருவிழாக்களாக, முதல் பலன்களைக் கொண்டாடும் விழாக்களாக இருந்தன. உதாரணமாக, பாஸ்கா விழா ஆயர்களுக்கும் மந்தைகளுக்குமான விழா. புளிப்பற்ற அப்பவிழா விவசாயிகளின் அறுவடைவிழா. இந்த இரண்டு விழாக்களும் இணைந்து எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற நிகழ்வையும் பாலைவனப் பயணத்தையும் நினைவுகூர்கிறது. முதல் பலன் விழா பார்லி அறுவடையைக் கொண்டாடுகிறது. பார்லி குளிர்காலம் அல்லது இலையுதிர் காலத்தில் விதைக்கப்பட்டு வசந்த காலத்தில் அறுவடை செய்யப்படுகிறது. வாரங்களின் திருவிழா (விப 23:16) பாஸ்காப் பெருவிழாவிற்குப் பின் ஐம்பது நாள்கள் நீடித்தது. இந்தக் காரணத்தினால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இந்த விழா ஐம்பதாவது நாள் விழா அல்லது பெந்தக்கோஸ்து விழா என்றழைக்கப்பட்டது. பெந்தக்கோஸ்து என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஐம்பது என்று பொருள் (காண்க திப 2:1). பெந்தக்கோஸ்து விழா ஒரு திருப்பயணவிழா. இந்த விழா முக்கியமான கோதுமை அறுவடையைக் கொண்டாடியது. பெந்தக்கோஸ்து விழா நாளில் நிலத்தின் முதல் பலனை ஆண்டவருக்குக் காணிக்கையாகச் செலுத்தவேண்டும்; அத்துடன் வகைப்படுத்தப்பட்ட விலங்குகளையும் பலியிடவேண்டும்.பெந்தக்கோஸ்துப் பெருவிழா ஆண்டவர் முன்னிலையில் மிகவும் மகிழ்ச்சியான நாள். எனவே அந்த நாளில் நீயும், உன் புதல்வர் புதல்வியரும், உன் ஆண் ஊழியர்களும் பெண் ஊழியர்களும், உன் நகரில் உள்ள லேவியனும் அன்னியனும் அனாதைகளும், கைம்பெண்களும் உங்கள்

கடவுளாகிய ஆண்டவர் திருமுன் மகிழ்வீர்களாக (இச 16:10-12) என ஆண்டவர் கூறுகின்றார்.

பெந்தக்கோஸ்து பெருவிழாவிற்குப் பின் இலையுதிர்கால விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இதில் முதலாவதாக வருவது எக்காளம் ஊதும் நாள். இது புதிய ஆண்டைக் குறிக்கும் ஒரு சடங்கு.

நல்ல மழை பொழியவும், பயிர்கள் செழிக்கவும், மந்தைகள் பெருகவும் கடவுளின் கவனத்தை ஈர்ப்பதற்காக எக்காளம் ஊதப்படுகிறது. இலையுதிர்காலத்தில் வருகின்ற விழாக்களுள் இரண்டாவதாகப் பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் வருகிறது. பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் ஒரு சுய பரிசோதனை செய்யும் நாள். அந்த நாளில் மக்கள் நோன்பிருந்து கடவுளை வேண்டுவது வழக்கம். அந்த நாளில் அதுவரைக் கண்டுகொள்ளாத, அல்லது மறைக்கப்பட்ட பாவங்களுக்குப் பரிகாரம் தேடப்படுகிறது. இலையுதிர் காலத்தில் மூன்றாவதாகவும், வருடத்தில் இறுதியாகவும் வருகின்ற விழா கூடாரப் பெருவிழா. இப்பெருவிழா மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட வேண்டிய விழா. கூடாரத் திருவிழா சேகரிப்பு விழா எனவும் அழைக்கப்பட்டது (விப 23:16). இது கோடைகால அறுவடை முடிவதைக் குறித்தது. சேகரிப்பு விழா நன்றிகூறும் விழாவாகவும் இருந்தது எனலாம். ஏழு நாள்கள், அதாவது ஏழாம் மாதத்தின் பதினைந்தாவது நாளிலிருந்து இருபத்து ஒன்றாம் நாள்வரை பேரீச்ச ஓலை மற்றும் செழுமையான தளிர்களால் உருவாக்கப்பட்ட கூடாரங்களில் தங்கியிருக்க வேண்டும். இது இஸ்ரயேல் மக்கள் பாலைவனப் பயணத்தின்போது கூடாரங்களில் தங்கியிருந்ததை நினைவு கூர்வதற்காக செய்யப்படுகிறது. குடும்பத்தினர் ஒவ்வொருவரும் பாலைவனப் பயணத்தின்போது அடைந்த துன்பங்களை நினைவு கூரவேண்டும்.

கடவுள் அவர்களைக் குடியேற்றிய கானான் நாட்டில் கிடைக்கின்ற அபரிமிதமான உணவுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டும். கானானில் அவர்களின் மகிழ்ச்சி நிறைவு பெறுகிறது (இச 16:15). எண் 29:12 14 இன் படி ஏராளமான எரிபலிகளும் ஒரு குற்றநீக்கப் பலியும் ஒவ்வொரு நாளும் ஒப்புக் கொடுக்கவேண்டும். மாதத்தின் இருபத்தி இரண்டாம் நாளில் திருப்பேரவை கூட்டப்பட்டு கூடாரப்பெருவிழா நிறைவுக்குக் கொண்டுவரப்படும். அத்துடன் பாஸ்கா விழாவுடன் தொடங்கிய அனைத்து விழாக்களும் முடிவுக்குவரும். கடவுள் தன் மக்களை எல்லாவிதத்திலும் ஆசிர்வதித்திருக்கிறார். கடவுளின் கொடைகளை அவர்கள் எப்போதும் மறத்தலாகாது (காண்க இச 8:10-14).

பாஸ்காப் பெருவிழாவும் கூடாரப் பெருவிழாவும் விடுதலைப் பயண நிகழ்வுகளையும் பாலைவனப்

பயணத்தையும் மக்களுக்கு நினைவுபடுத்தியது. பாஸ்காப் பெருவிழா, பெந்தக்கோஸ்து பெருவிழா மற்றும் கூடாரப் பெருவிழா ஆகிய மூன்று பெருவிழாக்களும் திருப்பயண விழாக்கள். இந்த விழாக்களின்போது மக்கள் திருஉறைவிடத்திற்கு ஆண்டவர் திருமுன்னிலைக்கு வரவேண்டும் (விப 23:14-17; இச 16:18).

பிற்காலத்தில் எருசலேம் கோவிலில் வழிபாடுகள் நடந்த காலத்தில் இந்த விழாக்களுக்கு மக்கள் எருசலேமுக்குத் திருப்பயணிகளாக வந்தனர். இந்த மூன்று விழாக்களும் கடவுளோடு தங்களுக்குள்ள உறவைப் புதுப்பிக்கவும் இஸ்ரயேல் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தவும் உதவின.

இஸ்ரயேல் மக்களின் விழாக்களை ஆய்வு செய்தால் பிற்காலத்தில் எழுதப்பட்ட ஆவணங்கள் மற்றும் மரபுகள் இந்த விழாக்களை இஸ்ரயேல் மக்கள் அனுபவித்த கடவுளின் மீட்புச் செயல்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கின்றன என்பது தெரியவரும். உதாரணமாக ஆண்டவர் சீனாய் மலையில் மோசே வழியாக திருச்சட்டங்களைக் கொடுத்த நிகழ்வு பெந்தகோஸ்து விழாவுடன் தொடர்புபடுத்தப்பட்டது. பாலைவனத்தின் கூடாரங்களில் வாழ்ந்ததை நினைவு கூரும் விழாவாகக் கூடாரத் திருவிழா மாறியது. ஆனால் தொடக்கத்தில் இந்த விழாக்கள் அனைத்தும் விவசாயத் தொழிலுடன் தொடர்புடையவைகளாகவே இருந்தன. பொதுவாக எல்லா விழாக்களும் அறுவடைக் காலங்களில் கொண்டாடப்பட்டன. உதாரணமாக, பாஸ்காப் பெருவிழாவும் புளிப்பற்ற அப்ப விழாவும் வசந்த காலத்தில் பார்லி அருவடை செய்யும் நேரத்தில் கொண்டாடப்பட்டது. வாரங்களின் விழா ஜீன் மாதத்தில் கோதுமை அறுவடை செய்யும் காலத்தில் கொண்டாடப்பட்டது. ஏழாவது மாதத்தில் (செப்டம்பர் - அக்டோபர்) மூன்று விழாக்கள் கொண்டாடப்பட்டன. அவை முறையே எக்காளம் ஊதும் நாள், பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் மற்றும் கூடாரப்பெருவிழா.

இந்தவிழாக்கள் திராட்சை, அத்தி மற்றும் ஓலிவம் ஆகியவை விளையும் காலத்துடன் தொடர்புடையவை. இலையுதிர் காலமான அக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் மழை பொழியும். அப்போது விவசாயப் பணிகள் தொடங்கும். அறுவடைக் காலங்களில் விழாக்களைக் கொண்டாடுவதன் மூலமாக இஸ்ரயேல் மக்கள் தங்களைப் பராமரித்துப் பாதுகாக்கும் கடவுளுக்கு நன்றி செலுத்தினார்கள். மேலும் இந்தக் கொண்டாட்டங்கள் பிற இனத்தவரின் ஒழுக்கக்கேடுகள் மற்றும் சிலைவழிபாடுகள் மிகுந்த அறுவடைத் திருநாள்களிலிருந்தும் இஸ்ரயேல் மக்களைப் பாதுகாத்தது.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf



# ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

எசா. 50 : 4–7, பிலி. 2 :6–11,
மத். 26 : 14 – 27, 66

**02-04-2023**




**பா. சேவியர்**
மரியநாதபுரம்,
திண்டுக்கல்


## திருவழிபாட்டு நிகழ்வுகளின் முன்னுரை

கரங்களில் குருத்தோலை ஏந்தி, இயேசுவை நம் அரசராக ஏற்று வழிபட வருகை தந்துள்ள அன்பு இறை குலமே, இறையாசீரை பகிர்ந்தளிக்க வருகை தந்துள்ள குருகுலமே உங்கள் அனை வரையும் புனித வாரத்தின் நுழைவாயிலில் நின்றுகொண்டு வரவேற்று மகிழ்கிறேன்.

இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என அறிக்கையிடவும், நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை பெற்றிடவும், குருத்தோலை பவனியில் கலந்து கொண்டு "உன்னதங்களிலே ஓசான்னா" என்று களிகூர்ந்து ஆர்ப்பரித்து மகிழ நாம் இங்கே கூடியுள்ளோம்.

இஸ்ரயேல் மக்களின் வெற்றி ஆர்ப்பரிப்புகளுக்கு இடையே எருசலேமில் நுழைந்த இயேசு கிறிஸ்து, அதே மக்களின் கூக்குரலால் மரணத்துக்கு தீர்ப்பிடப்பட்ட நிகழ்வுகளை சிந்திக்கவும், பாடுகளுக்குப் பின்னால் புதிய பாதை உண்டு என்பதை விசுவசித்து ஏற்கவும் இந்த குருத்தோலை பவனி நம்மை அழைக்கிறது.

இன்றைய வாசகங்கள் அனைத்தும் மெசியாவின் வருகை குறித்தும், அவருடைய வருகைக்காக ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும் பேசுகின்றன.

எளிய கோலத்தில் பவனி வரும் இயேசுவை நம் விசுவாச கண்கொண்டு தெய்வத் திருமகனாகப் பார்த்து பரவசப்பட்டு போற்றி, அவர் அரசர், மீட்பர், துன்புறும் ஊழியர் என்னும் உணர்வோடு அவரை ஏற்று, வாழி என்றும், ஓசன்னா என்றும் பாடியபடி இத்திருப்பவனி வழியாக இயேசுவோடு கல்வாரிக்கு பயணமாவோம்.

இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது, யூதாசால் காட்டிக்கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டது, அவர் சிலுவையில் உயிர் துறந்து அடக்கம் செய்யப்பட்டது என திருப்பாடுகளின் நீண்ட வரலாற்றை நாம் இன்றையத் திருப்பலியில் தியானிக்க இருக்கின்றோம். இப்புனித வாரம் முழுவதும் இயேசுவின் பாடுகளோடும் மரணத்தோடும் ஒன்றித்து மனமாற்றம் பெற்று அன்பு, தாழ்ச்சி, சகோதரத்துவம் என்னும் பண்புகளைக் கொண்டு இயேசுவின் இறையாட்சியின் பங்காளர் களாக நாம் வாழ இறையருளை வேண்டி இன்றைய திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

தான் கேட்டதை, கற்றதை, உணர்ந்ததை பிறருக்கு அறிவிப்பவனே உண்மை ஊழியன் என்பதை எடுத்துரைக்கிறார் எசாயா. இறைத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு பணி புரியும்போது வரும் துன்பங்களையும் சவால்களையும் நெருக்கடிகளையும் எத்தகைய மன நிலையோடு எதிர்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கீழ்படிதலும், தாழ்ச்சியும் உள்ளவன் உயர்த்தப்படுவான். தாழ்வே உயர்வுக்கு வழி, தாழ்வின்றி உயர்வில்லை என்பதை எடுத்துரைக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். இயேசுவின் வழியே தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என்ற நம்பிக்கை கீதத்தை இவ்வாசகத்தின் வழியே தூய பவுலடியார் எழுப்புவதை கவனமுடன் கேட்போம்.

# மன்றாட்டுகள்

1. ஆக்குபவராய், காப்பவராய், அருள் தருபவராய் விளங்கும் தந்தையே இறைவா, தான் கேட்டதை, கற்றதை, உணர்ந்ததை பிறருக்கு அறிவிக்கும் உண்மை ஊழியராய் பணி புரியும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர் கள் அனைவரும் இயேசுவிடம் காணப்படும் பண்புகளைக் கொண்டு அர்ப்பணிப்போடு பணியாற்றவும். அவர்கள் தங்கள் பணி வாழ்வில் எதிர்கொள்ளும் துன்ப துயரங்கள் இடையூறுகள் போன்றவைகளை துணிச்சலுடன் சந்தித்து, ஆற்றலுடன் செயல்படவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. விடுதலையின் தெய்வமே இறைவா, புனித வாரத்தில் நுழைகின்ற நாங்கள் உமது திருமகன் இயேசுவின் பாடுகளையும், இறப்பையும் சிந்தித்து, தியானித்து அதன் மூலம் எங்கள் பாவ வழியை விட்டொழித்து, உமது அருளினால் புது வாழ்வை துவங்கி, உமக்கேற்ற மக்களாய் வாழவும், எங்கள் வாழ்க்கையில் வருகின்ற துன்ப துயரங் களை அவரைப்போல் இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டு அவரை பின் செல்லவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. காலந்தோறும் எம்மை தட்டி எழுப்பி, நல்வாக்கால் எம்மை ஊக்குவிக்கும் இறைவா, எங்கள் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணமாக்கி புதுவாழ்வினை எமக்கு அருள வேண்டுமென்றும், உமது கொடையாக நாங்கள் பெற்றுள்ள இந்த ஒப்புரவு காலத்தை நன்றியுடன் பயன்படுத்தி உமக்கேற்ற பிள்ளைகளாக வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. எம்மோடு என்றும் வாழும் வான் படைகளின் ஆண்டவரே இறைவா, எங்களுடைய வாழ்வில் துன்ப துயர வேளைகளில் நீர் உம் மகிமையைக் காண்பிக்கின்றீர், துன்ப துயரங்கள்தான் உமது திருக்கரத்தின் வல்லமையையும், உமது பிரசன்னத்தையும், மாட்சி நிறைந்த உம் மகிமையையும் எமக்குக் காட்டுகிறது என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து, எங்கள் வாழ்வில் வரும் துன்ப துயரங்களை மகிழ்வுடன் ஏற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



**வேத கீதம் விடாமலே**
**ஓதி யோதிஉள் ளன்பினால்**
**பாத பங்கயம் பரவவென்**
**மீதி ரக்கம்வை வேதனே.**

*இறைவா! இயேசுவே! வேதத்தின் பொருளானவரே! வேதத்தையும் வேதம் சார்ந்த பாடல்களையும் நான் மீண்டும் படித்தறியவும், உம்மேல் கொண்ட அன்பினால் உம்மைப் பாடவும், நீவிர்தான் எனக்கு அருள் கண் காட்டியருள வேண்டும். உம் அன்பில் உருகும் மன நிலையை நீவிர்தான் எனக்கு வழங்க வேண்டும்.*

# ஞாயிறு மறையுரை



அருட்பணி.இராபர்ட்,திண்டுக்கல்

## புனித வாரம் – 02.04.2023

எசாயா 50/4-7 – பிலிப்பியர் 2/6-11 – மத்தேயு 26/12-27/66

## ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

### துன்பத்தினால் கிடைத்த மேன்மை

குழந்தைத் தொழிலாளர் தடுப்புச்சட்டம் வெளிவராத காலம். ஒரு தாய் தன்னுடைய பத்து வயது மகனை வேலைக்காக தொழிற்சாலைக்கு அனுப்பியிருந்தார். அவன் அங்கு அடிமையைப்போல் வாழ்ந்தான். ஆனால் அவன் பாடுவதிலும் இசைக் கருவிகளை மீட்டுவதிலும் வல்லவனாக இருந்தான். எனவே அவனுடைய தாய் அவனிடம் நீ எவ்வளவு துன்பப்பட்டாலும் தொடர்ந்து உன்னுடைய இசைத் திறமைகளை வளர்த்திக்கொள் என்று கூறினாள். இவனும் தனக்கு கிடைக்கக்கூடிய சிறிய தொகையை வைத்துக்கொண்டு தனக்கென ஒரு ஆசிரியரைத் தேடி தனது இசை ஆர்வத்தை வளர்த்தான். ஒரு கட்டத்தில் இசை ஆசிரியர் அவனிடம் உனக்கு கிடைக்கும் இச்சிறிய தொகையையும் செலவழிப்பதற்கு பதிலாக நீ அடிமையாகவே இருந்து சம்பாதிக்கலாமே என்றார். இதைக் கேள்விப்பட்ட தாய் இவனை மற்றொரு இசை ஆசிரியரிடம் அனுப்பி வைக்கிறார். அவனும் அயராது உழைத்து இசை மேதையாகின்றான். பின்னாட்களில் உலகம் போற்றிய கென்றிக்கோ காருசோ என்ற புகழ்ப்பெற்ற இசை ஞானியானான். துன்பத்தினால் மேன்மையடைந்தான்.



ஆதிக்கச் சக்திகள் நினைக்கிறது இன்று உலகமே அவன் பின் சென்றுவிட்டது என உள்ளம் குமுறுகிறார்கள். இதுவரை உலகம் காணாத ஒரு பெரும் கூட்டத்தை அச்சிற்றூர் காண்கின்றது.

எப்பொழுதுமே தனக்கென ஒரு கூட்டத்தை வைத்து தங்களை பெரியவர்களாகக் காட்டிக்கொண்டிருக்கும் ஆதிக்கச் சக்திகளை பயம் பற்றிக்கொள்கிறது. உண்மைத் தலைவனை ஊர் கண்டுக்கொண்டதே என புலம்பும் போலித் தலைவர்களின் ஆட்டம் முடிவுக்கு வருகிறது.

எண்ணிலடங்கா சுமைகள் அளவுக்குமீறிய அத்துமீறல்கள் சட்டங்களின் சவுக்கடிகள் என நம் அன்பு தெய்வத்தை அராஜகத்தின் அரசன்போலக் காட்டி தங்கள் வயிற்றை நிரப்பிக்கொண்டிருந்த ஆதிக்கச் சக்திகள் – ஓசான்னா என்ற சத்தம் கேட்டு நடுங்கிப் போகின்றனர். சிதறிக் கிடந்த மக்கள் ஒரே மனத்தோராய் ஒன்றுக்கூடி குருத்தோலைகளை ஏந்தி நிற்பது ஆதிக்கச் சக்திகளின் கோபத்தை தூண்டுகிறது. இப்படிப்பட்ட கூட்டத்தின் நயவஞ்சகம் தெரிந்து தான் யெருசலேம் நகருக்குள் செல்கிறாரா? அல்லது தெரியாமல் செல்கிறாரா? தான் சிலுவைச் சாவுக்குக் கையளிக்கப்படப்போவதும் இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். தன்னை அவரது பன்னிரு சீடர்களில் ஒருவர் காட்டிக் கொடுக்கப்போவதும் அவருக்குத் தெரியும். அவர் பிடிபடும்போது அனைத்து சீடர்களும் சிதறிப்போவார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். ஆம். அவர் படப்போகும் பாடுகள் அனைத்தும் அவருக்குத் தெரியும். எல்லாம் தெரிந்து அறிந்து புரிந்து உணர்ந்து யெருசலேமுக்குள் நுழைகிறார். காரணம் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றவே. இயேசுவின் பாடுகள் இறப்பு உயிர்ப்பு ஆகியவற்றின் வழியாக தனது அன்பு எவ்வளவு பெரியது என்பதை உலக மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதே தந்தையின் விருப்பமாகும். தனது தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசையிருந்தாலும் பாடுகளை துன்பங்களைக்கண்டு இயேசு அஞ்சியிருக்கமாட்டாரா? அஞ்சினார் என்பது அவரது செபத்திலிருந்தே நமக்குப் புலப்படுகிறது. கெத்சேமனி தோட்டத்தில் முகங்குப்புற விழுந்து இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும் என்று செபித்ததே அவரின் துன்பத்திற்கு சாட்சியாக அமைகிறது. இப்படிப்பட்ட ஆழ்த்துன்பத்தை இயேசு எவ்வாறு கடந்தார் என்பதற்கு இன்றைய முதல் வாசகம் பதில் தருகிறது. ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார்; நான் அவமானம் அடையேன் எனக்கூறுகின்றார். இந்த நம்பிக்கைத்தான் மீட்பராகிய இயேசுவின் இதயத்திலிருந்த அச்சத்தை அழித்தது. துன்பங்களால் வருகின்ற அச்சத்தை அழிக்கும் ஆற்றல் நம்பிக்கைக்கு உண்டு.

இறைவன் என்னை துன்பத்திலிருந்து மீட்பார் என்னை சாவிலிருந்து உயிர்ப்பிக்கச் செய்வார் என்ற நம்பிக்கைத்தான் இயேசுவை யெருசலேமுக்குள் நுழையச் செய்கிறது. இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கூறுவது போல கடவுளும் அவரை மிகவே உயர்த்தி விண்ணவர் மண்ணவர் கீழுலகோர் அனைவரையும்

அவருக்கு அடி பணிய வைத்தார். நம்முடைய அன்றாட வாழ்க்கையில்தான் எத்தனை பாடுகள் எத்தனை சிலுவைகள் எத்தனை சோதனைகள் எத்தனை வேதனைகள். எங்கு நோக்கினும் சிலுவைகள். ஆனால் சிலுவைகளைக்கண்டு ஒடி ஒளியாமல் அவற்றின் நடுவே ஆனந்தமாக ஆரவாரத்தோடு வெற்றி வீரனைப்போல வலம் வருவோம்.





# ஆண்டவருடைய இரவு விருந்து

விப. 12:1-8, 11:14.
1 கொரி. 11:23-26, யோவா. 13:1-15



பா. சேவியர்
மரியநாதபுரம்,
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

தீமையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, நித்தியத்திற்கும் நிலையான வாழ்வைப் பற்றிக்கொள்வதைக் குறிக்கும் பாஸ்கா விழாவில் பங்கெடுக்க வருகை தந்துள்ள அன்பு இறை குலமே, எம்மை நெறிப்படுத்தி வழி நடத்தும் குருகுலமே உங்கள் அனைவரையும் ஆண்டவருடைய இரவு விருந்திற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று, பழைய ஏற்பாட்டை புதுப்பித்து புனரமைத்து, புதிய ஏற்பாட்டை உருவாக்கு கிறார் இயேசு. அவர் தன்னையே உடைத்து, தனது உடலையும், இரத்தத்தையும் நமக்கு உணவாகவும், பானமாகவும் தருவதன் வழியாக, தன் அன்பின் கொடையாக நற்கருணை என்ற திருவருட்சாதனத்தை ஏற்படுத்துகிறார். அதன் வழியாக அவரைப் போல் அடுத்தவரை அன்பு செய்ய அழைக்கிறார்.

இயேசுவைப் போல், நாமும் அடுத்தவரின் நலனில் அக்கரை கொண்டு, நேசித்து வாழ, நம்மையே உடைத்து பகிர்ந்து கொடுக்க முன்வர வேண்டும் என்று இந்த புனித வியாழன் நம்மை அழைக்கிறது.

தனது மேய்ப்புப் பணியை தொடர்ந்து நிறைவேற்ற, மக்களை பசும்புல் மேய்ச்சலுக்கும், தெளிந்த நீரோடைக்கும் அழைத்துச் செல்ல, அவர்களை மாசற்ற செம்மறிகளாய் மீட்டுருவாக்கம் செய்ய, மீட்புப் பணி தொடர இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தி, குருத்துவத்தில் நம்மைப்போல் சாதாரண மக்களும் பங்கெடுக்க வழி செய்கிறார்.

இயேசுவின் கல்வாரி பாடுகள், நமது வாழ்வுக்கு அடித்தளமாய் அமைய, இன்றைய புனித நிகழ்வுகளில் பங்கெடுத்து நமது வாழ்வை புதுப்பிப்போம். வாழும் நாளில் நாம் நீதியின் வழியில் பயணிக்க, சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் கடைப்பிடித்து பணிவிடை புரிந்து மகிழ, இயேசுவின் அன்புச் சட்டத்தை ஆடையாக அணிந்து வாழ வரம் வேண்டி இன்றைய திருநிகழ்வுகளிலும், திருப்பலியிலும் பக்தியுடன் பங்கெடுப்போம்.

குருத்துவம் ஓர் இறை அழைத்தல், குருத்துவம் இறைவனின் கொடை, குருத்துவம் ஓர் அர்ப்பணம். குருத்துவம் ஓர் ஆன்மீக தியாக வாழ்வு என்பதை உணர்ந்து, நம் திருத்தந்தை ஆயர்கள், நம் பங்குத் தந்தையர் மற்றும் அருட்பணியாளர் அனைவரையும் வாழ்த்தி வணங்குவோம். அவர்களது தியாக வாழ்வை எண்ணி அவர்களைப் போற்றி புகழ்வோம். அவர்களது பணி சிறக்க, நல்ல உடல் நலத்தையும் ஆன்மபலத்தையும் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இயேசு திவ்ய நற்கருணையை உண்டாக்கிய இந்நன்னாளில் பாஸ்கா திருவிழா பற்றிய முதல் வாசகத்தை திருஅவை நமக்கு வழங்குகிறது. இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, விடுதலை வாழ்விற்குள் வீறுநடை போட அடிப்படை காரணமாக இருந்தது இந்த பாஸ்கா திருநிகழ்வு தான். சுதந்திர வாழ்விற்கு எழுச்சி தரும் தென்றலாய் வீசும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம். அது நம் செவியில் நுழைந்து, இதயம் தழுவி, சிந்தையில் நிலைக்கட்டும்.

## இரண்டாம் வாசக முன்னுரை

திருவிருந்தை ஆண்டவர் இயேசு ஏற்படுத்தியது பற்றி, மூன்று நற்செய்தியாளர்கள் மட்டுமன்று, தூய பவுலடியாரும் எடுத்துக்கூறும் கருத்து இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. வழிபாடுகள் வாழ்வாகும் போதுதான், வாழ்வில் மாற்றம் பிறக்கிறது. அதன் மூலம் வாழ்க்கை அர்த்தமுள்ளதாய் மாறுகிறது. திருவிருந்தில் பங்கு கொள்வது என்பது வெற்றுச் சடங்காக மாறிவிடாமல், நம் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதற்கான தகுதிகளையும், குணங்களையும் எடுத்துச்சொல்லும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்டு நம்மை நாமே தகுதி உள்ளவர்களாக்குவோம்.

## பாதம் கழுவும் சடங்கு முறை

கருணையும் – கடமையும், பணிவும் – பொறுமையும், எளிமையும் – தாழ்ச்சியும் இருந்தால் தரணியில் தலை சிறந்த தலைவர்களாக உருவாக முடியும் என்பதை இயேசு தனது செயலால் வாழ்ந்து காட்டுகிறார். உயர்ந்தவன் தாழ்ந்தவன், இருப்பவன் இல்லாதவன், படித்தவன் பாமரன் என்ற வேற்றுமைகளைக் களைந்து அனைவரையும் அன்பின் சாயலாக, ஆண்டவரின் வடிவாக ஏற்று வாழ இப்பாதம் கழுவும் திருச்சடங்கு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்பதை இயேசு செயலில் காட்டிய அந்த பணிவான நிகழ்வு வெறும் அடையாளச் சடங்கு அல்ல, மாறாக நம் வாழ்வில் தாழ்ச்சியையும், எளிமையையும் போதிக்கும் பாடம் என்பதை மனதில் நிறுத்தி, இத்திருநிகழ்வில் பங்கெடுப்போம்.

## மன்றாட்டுகள்

**உங்கள் பதில் : திவ்ய நற்கருணை நாதரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

1. பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்று வாழ்ந்துகாட்டிய அன்பு இறைவா, உமது வழியைப் பின்பற்றி, உமது அழைப்பை ஏற்று, பணிவிடை புரிய குருத்துவத்தை தேர்ந்தெடுத்த, எம் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரையும், அவர்களை அருட்பணிக்கு அர்ப்பணித்த அவர்தம் பெற்றோரையும் நிறைவாக ஆசீர்வதியும். உம் வார்த்தையின் வழியே பயணித்து, இறைமக்களை அன்பின் வழியிலும், ஆன்மீக ஒளியிலும் வழி நடத்த அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், ஆன்மபலத்தையும், உள்ள உறுதியையும், நல்ல உடல் நலத்தையும் தந்தருள வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையும் இரக்கமும் நிறைந்த இறைவா, எம்மை வழி நடத்தும் எம் தேசத்தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதிலும், நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதிலும் முழு கவனம் செலுத்தி கடமையாற்றவும், தாழ்ச்சி, எளிமை, ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளை கொண்டவர்களாய், லஞ்ச லாவண்யங்களை தவிர்த்து, மக்கட் பணியாற்றவும் அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், பொறுப்புணர்வையும், நல்ல உடல் நலத்தையும் தந்தருள வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

3. தன் அன்பின் கொடையாக, தன்னையே நற்கருணை வடிவில் வழங்கிய இறைவா, பல கோதுமை மணிகள் அப்பமாகி உணவாக வருவது போல, நாங்கள் பலராயினும் ஒரே உடலாய் உமக்குள் வாழ்கிறோம் என்ற உயர்ந்த எண்ணத்தோடு, நாங்கள் அனைவரும் ஒரு குலம், ஓரினம் என்ற சிந்தனையுடன் வாழ, அருள் தர வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

4. பழைய ஏற்பாட்டை புதுப்பித்து புனரமைத்து, புதிய ஏற்பாட்டை எமக்காக உருவாக்கிய இறைவா, கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற குடும்ப உறவில் அப்பழுக்கற்ற அன்பை வெளிப்படுத்தவும், அதன் நீட்சியாக அயலாரோடு அன்பைப் பகிர்ந்து, அனுசரித்து வாழ்ந்து, எங்கள் சமுதாயக் கடமைகளை சிறப்புற ஆற்றி, நீர் வகுத்த மீட்பின் பாதையில் உம்மோடு சேர்ந்து பயணிக்க அருள் தர வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

## நற்கருணை பவனி முன்னுரை



இயேசு தான் சென்றவிடமெல்லாம் அன்பை விதைத்துக்கொண்டே சென்றார். எண்ணற்ற பல புதுமைகளை புரிந்துகொண்டே சென்றார். மக்களுக்கு பல நன்மைகளை செய்து கொண்டே சென்றார்.

அவர் என்னை தொட மாட்டாரா? அவரது கடைக்கண் பார்வை என் மேல் விழாதா? அவரது ஆடையின் விளிம்பையேனும் தொட மாட்டோமா? என்று அன்று பலர் ஏங்கினர். இன்று இப்போது அதே இயேசு, விண்ணகம் நோக்கிய பயணத்தில், வழிப் பயணக் கொடையான, ஆரோக்கியத்தையும், ஆற்றலையும் வழங்கவல்ல ஆன்ம உணவான அப்ப வடிவில் நம்மைத் தேடி, நம் மத்தியில் பவனியாக வருகிறார்.

வாருங்கள் இறை மக்களே, தன் அன்பின் கொடையாக தன்னையே நற்கருணை வடிவில் வழங்கிய இறைவனை வரவேற்க தயாராவோம். நம்மை நோக்கி வருகின்ற அவரை, அனைவரும் முழந்தாள் பணிந்து, வணங்கி வரவேற்போம். கெத்ஸ்மணி தோட்டத்தில் தனிமையில் தனது துன்ப நிலையை எண்ணி துயரப்படும் நம் இயேசுவோடு நாமும் விழித்திருந்து செபிப்போம்.

## நன்றி மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா, உம் திருமகனின் இறுதி இராவுணவை நினைவு கூர்ந்து கொண்டாடி மகிழ புனித வியாழன் என்ற மாபெரும் நாளை எமக்குத் தந்து, எம்மில் மனமாற்றம் நிகழ அருள் தந்தமைக்காய் இறைவா உம்மை நன்றி கூறுகிறோம்.

பணியை ஏற்பதற்கல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்று கூறியதோடல்லாமல் பணிவு, எளிமை, தாழ்ச்சி, பொறுமை, அன்பு, கருணை ஆகிய நற்பண்புகளை வாழ்வாக்கி வாழ்ந்து காட்டிய இறைவா, அந்த நற்பண்புகளை இன்றைய புனித நிகழ்வுகள் வழியாக நாங்களும் பெற்று மகிழ அருள் தந்தமைக்காய் இறைவா உமக்கு நன்றி கூறுகிறோம்.

குருத்துவம் என்ற அரிய அருட் சாதனைத்தை இன்றைய நாளில் உருவாக்கி, உலக மாந்தரின் வாழ்க்கையை நெறிப்படுத்தி, நேரிய வழியில் வழி நடத்தும் நல்ல மேய்ப்பர்களை தந்த உம் கருணைக்காய் இறைவா உமக்கு நன்றி கூறுகிறோம். உம் திருஉடலை உணவாகவும், உம் திரு இரத்தத்தை பானமாகவும் ஈந்து, என் ஆன்ம பசி போக்கிய ஈடு இணையில்லா உம் தியாகத்தை எண்ணி இறைவா உமக்கு நன்றி கூறுகிறோம்.

உம் திருஉடல் திருஇரத்தத்திலான புதிய உடன்படிக்கையின் மாண்பினையும் பிறர் அன்பு அட்டளையின் முக்கியத்துவத்தையும் ஆழ்ந்து உணர்ந்தவர்களாய் எம் வாழ்வை தொடர அருள் தர வேண்டுமாய் நன்றியோடு இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.





# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

எசா. 52:13 - 53:12,
எபி. 4:14-16, 5:7-9,
யோவா. 18:1 - 19 : 42



**பா. சேவியர்**
மரியநாதபுரம்,
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

இருள் மண்டிக் கிடந்த இந்த உலகிற்கு இயேசு தன்னையே மெழுகாய் உருக்கி, ஒளி தந்த தியாகத் திருநாளாகிய புனித வெள்ளி வழிபாட்டிற்கு வருகை தந்துள்ள அன்பு இறைமக்களாகிய உங்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்கிறேன்.

இயேசுவின் துயர் மிகுந்த பாடுகளின் நினைவுகளில் மூழ்கி இருக்கும் நாம், இன்று அவரது அழகான ஆளுமையை தியானித்து, நேசித்து? அவரது அன்பை சுவைத்து நமதாக்கிக் கொள்ள இங்கே கூடியுள்ளோம். விண்ணிற்கும், மண்ணிற்கும் இடையில் சிலுவையில் பலியான செம்மறியாக உயர்த்தப்பட்டிருக்கிற இயேசுவைப் பார்த்து மீட்புப் பெற நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நம் ஆண்டவர் இயேசுவின் மரணத்தால், தாய் திருச்சபை துக்கத்தில் மூழ்கி இருப்பதை வெறுமையான பீடமும், எரியாத மெழுகுவர்த்திகளும் ஒலிக்காத மணிகளும் நமக்கு நினைவூட்டுகின்றன.

இன்றைய திருவழிபாட்டிற்கு திருச்சிலுவை நம்மை வரவேற்கிறது. அது "சிலுவையின்றி வெற்றி இல்லை" என்ற விதியை விளக்குகிறது. "உலகத்தின் இரட்சண்யம் இதிலேதான் தொங்கியது" என்பதை பறை சாற்றுகிறது.

இயேசுவின் பிறப்பு ஒரு தரித்திர நிலையில் அமைந்தாலும், அவரின் இறப்பு புதியதொரு சரித்திரத்தை படைக்கிறது. அவரது மரணம் நமக்குள் ஒரு மறுமலர்ச்சியை மலரச் செய்கிறது என்ற நம்பிக்கையோடு இயேசுவின் திருப்பாடுகள் குறித்த தியானத்தில் பக்தியுடன் பங்கெடுப்போம். இயேசுவின் மரணத்தால் நாம் உண்மையை, உரிமையை பெற்று விட்டோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் இறந்த இயேசுவுக்கு அஞ்சலி செலுத்துவோம்.

இறைவனின் வார்த்தையைக் கேட்டு இயேசுவின் பாடுகள், மரணம் இவற்றில் நாம் மனம் பதித்து மனமாற்றம் அடைவோம். அதன் மூலம் நம் வாழ்வில் புனிதம் பெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

ஆண்டவரின் ஊழியர் பற்றிய இறுதிக் கவிதை இன்றைய வாசகமாக அமைகிறது. எசாயா இறைவாக்கினர் இயேசுவை துன்புறும் ஊழியராக, நமது துயரம் சுமக்கும் சுமைதாங்கியாக சித்தரித்து இயேசுவின் பாடுகளை முன்னறிவிக்கிறார். துன்பங்களைத் தாங்கிக்கொள்வதும், ஏற்றுக்கொள்வதும்தான் பணி வாழ்வின் உச்சம் என்பதை உணர்த்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவை நித்திய தலைமை குருவாக படம்பிடித்துக் காட்டி, அவர் எவ்வாறு பழைய ஏற்பாட்டின் குருக்களில் இருந்து மாறுபட்டவராக இருக்கின்றார் என்பதையும், பழைய ஏற்பாட்டின் பலிப்பொருட்கள் குறையுடையதாய் இருக்கும்போது, புதிய பலிப்பொருளாகிய இயேசு எப்படி குறைவில்லாத செம்மறியாக இருக்கிறார் என்பதையும் விளக்கும் இந்த இரண்டாம் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

# திருச்சிலுவை ஆராதனை – முன்னுரை





இயேசுக் கிறிஸ்துவின் தியாகப் பலியால் வெற்றியின் சின்னமாக, தியாகத்தின் சின்னமாக உயர்த்தப்பட்ட திருச்சிலுவையின் ஆராதனை இப்போது தொடங்குகிறது. இயேசுவுக்கு மூன்று முத்தங்கள் கிடைத்தன.

மரிய மகதலேனாள் தன் பாவத்திற்காக கண்ணீர்விட்டு அழுது, இயேசுவின் பாதத்தை நனைத்துக் கொடுத்த முத்தம் – அது பாவ மன்னிப்பின் முத்தம். இந்த முத்தம் தான் இன்று நாம் இயேசுவுக்குக் கொடுக்கக்கூடியது. அந்த முத்தத்தை இப்போது அவரை தாங்கிய சிலுவைக்கு கொடுக்கப் போகிறோம்.



அருள் நிறைந்த அன்னை மரியாள் கொடுத்த முத்தம் – அது புனித முத்தம். அது நம்மால் கொடுக்க முடியாது.





யூதாசு பணத்துக்காக கொடுத்த முத்தம் – அது துரோக முத்தம். அதை நாம் கொடுக்கக் கூடாது.

குருவானவர் திருச்சிலுவை மரமிதோ என்ற வரிகளைப் பாட நாம் அனைவரும் வருவீர் ஆராதிப்போம் எனப் பாடுவோம். திருச்சிலுவைக்கு முதலில் குருவானவர் முத்தி செய்வார். அதன் பிறகு அனைவரும் வரிசையாக வந்து இயேசுவின் திருப்பாதங்களை பக்தியுடன் முத்தி செய்வோம்.




திருமதி.மார்க்ரேட் பாண்டியன்
கவுண்டம்பாளையம்,கோவை


# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

தீயவர்களுக்குள் ஒத்துப் போவார்கள்
ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வார்கள்
அதுவே அவர்களின் பலமும், பலவீனமும்
-அலெக்ஸாந்தர் சோலெஸ்ட்சின்

ஒரு சொல் போதுமென்றால்
இரு சொற்களைச் செலவு செய்யாதே
எவ்வளவு சொல்லியும் பயன் இல்லையென்றால
ஒரு சொல்லையும் விரயமாக்காதே
-கன்ஃபூஷியஸ்

ஆசைப்படுவதிலும்
ஒழுங்கைக் கடைப்பிடிப்பவர்
நற்பண்புடையவர்
-ஜான் லாக்

கோவப்படுத்துகிறவர்
நம்மை ஆளுகின்றார்.
-எபிப்டேட்டஸ்

நமது சிரிப்பு
எதிரியை சின்னாபின்னமாக்கும்

உன் வளர்ச்சியால்
பலர் நிம்மதியிழப்பர்...
பரவாயில்லை, வளர்ந்துகொண்டேயிரு




02.04.2023 - ஆண்டவரின் திருப்பாடுகளின் குருதது ஞாயிறு

குருத்தோலைப் பவனி நற்செய்தி வாசகம்

மத்தேயு 21/1-11

திருப்பலி வாசகங்கள்

எசாயா 50/4-7

பிலிப்பியர் 2/6-11

மத்தேயு 26/14-27/66

03.03.2023 - புனித வாரம் திங்கள்

எசாயா 42/1-7

யோவான் 12/1-11

04.04.2023 - புனித வாரம் செவ்வாய்

எசாயா 49/1-6

யோவான் 13/21-33, 36-38

05.03.2023 - புனித வாரம் புதன்

எசாயா 50/4-9அ

மத்தேயு 26/14-25

## 06.03.2023 – புனித வாரம் வியாழன்
## ஆண்டவரின் இராவுணவுத் திருப்பலி

விடுதலைப் பயணம் 12/1-8, 11-14
1 கொரிந்தியர் 11/23-26
யோவான் 13/1-15

## 07.03.2023 – திருப்பாடுகளின வெள்ளி

எசாயா 52/13-53/12
எபிரேயர் 4/14-16, 5/7-9
யோவான் 18/1-19/42

## 08.04.2023 – சனி
## பாஸ்கா திருவிழிப்பு

## 09.04.2023 – ஆண்டவரின் உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு பெருவிழா

திருத்தூதர் பணிகள் 10/34அ, 37-43
கொலோசையர் 3/1-4
அல்லது
1 கொரிந்தியர் 5/6ஆ-8
பாஸ்கா தொடர் பாடல்
யோவான் 20/19



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 39

அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல



### குறள்விளக்கம்

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை: புகழும் இல்லாதவை

### சிந்தனை

அர்னாட் பென்னட் என்ற ஆங்கில நாவலாசிரியர் தன் அந்தரங்கச் செயலாளர் குறித்து பிரமாதமாகப் புகழ்ந்துரைத்தார். பதிப்பகத்தார்கள், அந்தப் பெண்ணை சந்திக்க விரும்பினார்கள். உங்கள் செயல்திறனுக்கு என்ன காரணம்? அந்தப் பெண்ணிடமே கேட்டார்கள். அவர் சொன்னார், என் முதலாளி தான் காரணம் ஒரு சிறிய செயலை நான் சரியாகச் செய்தாலும் மனந்திறந்த பாராட்டுபவர். என் குறைகளைப் பெரிது படுத்தாமல் என் நிறைகளையே நினைவூட்டுவார். எனவே நான் குறைகளைக் குறைத்துக் கொண்டு திறமைகளை வளர்த்துக் கொண்டேன் என்றார்.

வாழ்க்கையில் முயற்சி மிக அத்தியாவசியமானது. முயற்சி இல்லாத வாழ்க்கை வீணானது. எந்த துறையில் வெற்றி அடைய வேண்டுமோ அந்தத் துறையில் நாம் விடாது முயற்சி செய்ய வேண்டும். அது போன்று தான் அறம் செய்வதற்கும் ஒருவன் விடாது முயற்சி செய்ய வேண்டும். இன்றைய சூழலில் தீமை செய்பவர்களும் திட்டமிட்டு முயற்சி செய்து தீங்கு செய்கிறார்கள். நம் ஆண்டவரும்,

ஒளியின் மக்களைவிட இவ்வுலகின் மக்கள் தங்கள் தலைமுறையினரிடத்தில் மிக்க முன்மதியுள்ளவர்களாய் நடந்து கொள்கிறார்கள் என்கிறார் (லூக் 16:8) .

வள்ளுவரும் நீ முயற்சி செய்து செய்யக் கூடியது அறமாகத்தான் இருக்க வேண்டும். தீமையை அல்ல என்கிறார். தீமை செய்யாமல் இருப்பதற்கு முயற்சி செய்தால் தான் முடியும். எனவே நல்லதை செய்வதற்கு முயற்சி செய்வோம். தீமையை செய்யாமல் இருப்பதற்கும் முயற்சி செய்வோம் மேலும்,

அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்கு தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல என்கிறார் இயேசு (யோவான்; 14:27).

வள்ளுவரும் அறத்தால் வருவது தான் இன்பம் பிறவழியில் வருவதெல்லாம் துன்பம் என்கிறார். எனவே நல்லதை செய்வோம் என்றும் மகிழ்ந்திருப்போம்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

# நலம் தரும் இயற்கை வளம்





திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்

நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலக் கல்வி
மறக்காமல் தினமும் 2 வெற்றிலை கட்டாயம் சாப்பிடுங்க! அதிசயத்தை காண்பீங்க...
திருமணம் போன்ற சுபகாரியங்கள், பூஜைகள் என
அனைத்து விசேஷங்களுக்கும்
வெற்றிலை என்பது முக்கியமான பொருளாக இருக்கின்றது.
இதில் பலவகையான சத்துக்களும் இருக்கின்றது.

## வெற்றிலை சிறந்த நச்சு நீக்கியாக இருக்கும்

வெற்றிலையை நாம் எடுத்துக்கொண்டால், உடலில் சேரும் அழுக்குகள் நீங்குவதுடன், யூரிக் அமிலத்தின் அளவும் சீராக வைப்பதற்கு உதவுகின்றது.
வெற்றிலை வயிற்றில் உள்ள பியூரின் அளவை அதிகரிக்காமல் செய்வதுடன்,
யூரிக் அமிலம் சீராக வைப்பதால், மாரடைப்பு, சிறுநீரக பிரச்சினையிலிருந்து தப்பிக்க முடியும்.
வாய் துர்நாற்றத்தினை முற்றிலும் போக்கும்
வெற்றிலையை முன்னோர் சளி, காய்ச்சல், நெஞ்சு இறுக்கம், சுவாசக்கோளாறு ஆகியவை குணமாக்க அதிகமாக பயன்படுத்தினர்.
வெற்றிலையைஇ கிராம்பு நீரில் கொதிக்க வைத்து டீ போல் குடித்து வர சுவாசக் கோளாறுகள் சரியாவதுடன்,
வெற்றிலையின் பத்து போட்டால் தலைவலியும் குணமாகும்.
வெற்றிலை உண்பதால் வயிற்றில் உள்ள புண்கள் குணமாகின்றன.
நம் உடலில் காணப்படும் பல நச்சுப்பொருள்களை வெற்றிலை சுத்தம் செய்கிறது.

## வெற்றிலையில் உள்ள சத்துக்கள்

வெற்றிலையில்

84.4% நீர்ச்சத்தும், 3.1% புரதச் சத்தும்,
0.8% கொழுப்புச் சத்தும் நிறைந்துள்ளது.
இதில் கால்சியம், கரோட்டின், தயமின், ரிபோபிளேவின்
மற்றும் வைட்டமின் சி உள்ளது.
கலோரி அளவு 44%.
தற்போதைய ஆராய்ச்சியில்,
வெற்றிலையில் மிகவும் வீரியமிக்க நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட
சவிக்கால் (Chavicol) என்னும் பொருள் இருப்பதாக கண்டறியப் பட்டுள்ளது.

**மருத்துவ குணங்கள்:**

சிறுநீர் பெருக்கி:
வெற்றிலையை சாறாக்கி, அதில் பால் கலந்து குடித்தால்
சிறுநீர் நன்றாக பிரியும்.
சிறுநீரகக் கோளாறுகள் குணமாகும்.

**சருமப் பராமரிப்பு:**

சருமத்தில் சொறி, தேமல், சிரங்கு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு தரும்.
சுத்தமான தேங்காய் எண்ணெயில் வெற்றிலையை போட்டு கொதிக்க வைத்து
எண்ணெய் சிவந்ததும் வடிகட்டி பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொண்டு,
தினமும் சருமத்தின் மீது தடவி வந்தால்
சொரி சிரங்கு படை போன்றவை குணமாகும்.

**சளி:**

வெற்றிலையில் நல்லெண்ணெய் தடவி
அகல் விளக்கில் சூடேற்றி
இளஞ் சூட்டில் மார்பில் பற்று போட்டால்
சளி குறையும்.
ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு இம்முறை பயன்படுகிறது.
வளரும் பிள்ளைகளுக்கு வெற்றிலை சாறுடன்
சம அளவு துளசி இலையை சேர்த்து
கசக்கி பிழிந்து சாறு எடுத்து 5 சொட்டு கொடுத்தால் சளி குறையும்.
வெற்றிலையில் கடுகு எண்ணெய் தடவி
மார்பில் தடவினால் இருமலுக்கு நிவாரணம் கிடைக்கும்.

**வயிற்றுக்கோளாறு:**

மலச்சிக்கல் இருந்தால் தினமும் காலையில் வெறும் வயிற்றில்
வயதுக்கேற்ப 10 30 மிலி அளவு வெற்றிலைச்சாறு குடித்து வந்தால் இ சரியாகும்.

**தாய்ப்பால் சுரக்க:**

தாய்ப்பால் சுரப்பதில் குறைபாடு இருந்தால், மார்பகத்தில் பால் கட்டிக் கொண்டால்,

வெற்றிலையை சூடுபடுத்தி மார்பின் மீது வைத்துக் கட்டலாம்.
வெற்றிலை இளஞ் சூடாக இருந்தால் போதும்.
தாய்ப்பால் சுரப்பு குறையும் போது
வெற்றியிலையில் விளக்கெண்ணெய் தேய்த்து
தணலில் சுட்டு மார்பகத்தில் கட்டி வந்தால் சுரப்பு அதிகரிக்கும்.
மார்பகப் பு,  தீப்பட்ட இடங்களில், காயங்கள் இருக்கும் இடங்கள்,
மூட்டு வீக்கங்கள் வெற்றிலையை இடித்து வைத்துக் கட்டினால் உபாதை குறையும்.
நன்றி எம் உறவுகளே..!
என்றும் உங்கள் அன்பு சகோதரன்.
ஜே. அன்புரோஸ்.நலநெறியாளன்
9360456063

